# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 05 செவ்வாய்க்கிழமை 18.06.2024 கதிர் 277







# அத்துமீறும் இந்திய இழுவைப் படகுகளைத் தடுத்திட வலியுறுத்தி யாழ். இந்தியத் துணைத் தூதரகம் முன்பாக இன்று போராட்டம்!

## இந்தியத் துணைத் தூதுவரிடம் மகஜரொன்றும் கையளிப்பு






இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறும் இந்திய இழுவைப் படகுகளைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் முன்பாக கடற்றொழிலாளர்கள் இன்று போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

2▶

## கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடுவோம்!

### கிராம உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை



எதிர்வரும் 24 ஆம் திகதி தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என கிராம உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயத்தை இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க அறிவித்துள்ளார்.

அத்தோடு, எதிர்வரும் 24 ஆம் திகதி தங்களது பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தற்பொழுது சட்டப்படி வேலை என்ற

2▶

## வீட்டு வாடகை பெறுவோருக்கு ஏப்ரல் முதல் புதிய வரி அறவீடு

### சர்வதேச நாணய நிதியம் முன்மொழிவு



2025 ஏப்ரல் 1 முதல் வீட்டு வாடகை மற்றும் காலியாக உள்ள சொத்துக்களுக்கு புதுவித வாடகை வருமான வரியை அறிமுகப்படுத்த சர்வதேச நாணய நிதியம் முன்மொழிந்துள்ளது.

இலங்கையின் அரச வருவாயை அதிகரிக்கும் நடவடிக்கையாக இதனை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளதாக நிதியம் குறிப்பிடுகிறது. இந்த வரி முறையை அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியமானது எனவும், 2025ஆம் ஆண்டுக்குள் இந்த வரி முறையை முழுமையாக நடைமுறைப்படுத்த இலக்கு வைத்துள்ளதாகவும் நாணய நிதியத்தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கணக்கிடப்பட்ட வாடகை

2▶

## தொலைத்தொடர்புச் சட்டமூலமானது அரசியல் சாசனத்துக்கு ஏற்புடையதல்ல!

### உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அறிவித்த சபாநாயகர்!



தொலைத்தொடர்புச் சட்டமூலம் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதன்படி, தொலைத்தொடர்புத் திருத்த சட்டத்தின் சில பிரிவுகள் அரசியல் சாசனத்துக்கு ஏற்ப இல்லை என்றும், உச்ச நீதிமன்றம்

2▶

## கோட்டாவிற்கு மக்கள் வழங்கிய காலம் வரையில் மட்டுமே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதிப் பதவியை வகிக்கலாம்!

### மாறாக நடந்தால் நீதிமன்றம் செல்வோம் என்கிறது பஃரல் அமைப்பு



நாட்டில் தற்போதுள்ள சட்டத்தின் கீழ், பதில் ஜனாதிபதியின் பதவி காலத்தை நீடிக்க வாய்ப்பில்லை எனவும், அவ்வாறு சட்டத்திற்கு மாறாக அதிகாரத்தை மேலும் நீட்டிக்க முயற்சித்தால், அதனை நீதிமன்றில் முன்னிறுத்துவதாகவும், பஃரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 40 வது பிரிவின்படி, மக்கள் ஆணையால் தெரிவாகிய

2▶

## வீட்டுவாடகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருமான வரி என்பது ஒரு வீட்டு உரிமையாளர் தனது வீட்டை வாடகைக்கு விட்டால் அவர் பெறும் வருமானத்தின் மதிப்பீடாகும், மேலும் இந்த வரியானது வீட்டிலிருந்து பெறக்கூடிய வருமானத்தை அடிப்படையாகக் கொண்டது மற்றும் வீட்டின் மதிப்பின் அடிப்படையில் அல்ல எனவும் குறிப்பிடப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தால் முன்னதாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சொத்து வரி, அன்பளிப்பு வரி மற்றும் பரம்பரை வரி ஆகிய வரி விதிப்பு முறைகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டமையின் காரணமாகவே இந்த புதிய வரி விதிப்பு முறையை அறிமுகப்படுத்த சர்வதேச நிதி நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ரேன-53)

## தொலைத்தொடர்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுட்டிக்காட்டியபடி திருத்தப்பட வேண்டும் எனவும் அந்தத் தீர்ப்பில் அறிவிக்கப்பட்டுள்ளதை அவர் சபையில் தெரிவித்தார். அத்துடன், சில திருத்தங்கள் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். (04)

## கோரிக்கைகளுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனடிப்படையில், நபர் ஒருவரின் மரணத்தின் போது வழங்கப்படும் ஆவணங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளை தற்போதும் வழங்கி வருவதாகவும் எனினும், கிராம சேவையாளர் சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவு போன்றவற்றை மறுசீரமைத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை கிராம உத்தியோகத்தர்கள் முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் நந்தன ரணசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். (04)

## அத்துமீறி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய அரசே எமது கடல் வளத்தினைச் சூறையாடாதே!, எம்மையும் வாழவிடுங்கள்! - போன்ற கோஷங்களை எழுப்பியவாறு யாழ் மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இன்று காலை இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் சென் ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மருதடிச் சந்தியில் இருந்து துணைத் தூதரகம் வரை போராட்டக்காரர்கள் பேரணியாகச் சென்றனர்.

இந்தியத் துணைத்தூதரகத்தையடைந்து அதன் முன்பாக கோசங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது இலங்கைக் கடற்படையே, நிறுத்து! நிறுத்து!! அத்துமீறலைத் தடுத்து நிறுத்து!!!, கடற்றொழில் அமைச்சரே கண்ணைத் திறந்து பாருங்கள்!, இந்திய அரசே எம்மையும் வாழ விடு!, சிறிலங்கா காவல்துறையே எங்களைத் தடுக்காதே! - உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து இந்தியத் துணைத் தூதுவரைச் சந்தித்து தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றைக் கையளித்தனர்.

## கோட்டாவிற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி தனது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் பதவி விலகினால், அதற்கு மற்றுமொரு பொருத்தமான நபர் நாடாளுமன்றத்திலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு தெரிவாகும் நபர் பதவி விலகிய முன்னைய ஜனாதிபதியின் மிகுதி பதவி காலம் முடியும் வரையில் மாத்திரமே பதவி வகிக்க முடியும் என குறிப்பிடப்படுகின்றது.

அதன்படி, கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இந்த வருடம் வரையில் தான் மக்கள் ஆணை கிடைத்திருந்தது. அவரது பதவி காலத்திற்கு மேலதிகமாக ஆட்சியில் இருப்பதற்கு ரணில் விக்ரமசிங்க முயற்சித்தால் அது மக்கள் ஆணைக்கு எதிரானது எனவும் ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார். (ரேன-54)

# 4 இந்திய மீனவர்கள் கைது



இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டனர்.

யாழ். காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும், அதிலிருந்த நான்கு இந்திய மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அவர்களைக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (05)

# நாட்டில் அரசியல் மாற்றத்திற்காக லண்டனில் இலங்கையர்களிடம் ஆதரவு கோரினார் அனுர!

தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு நாட்டின் அரசியல் போக்கை மாற்றியமைக்க வேண்டும் எனவும் அதற்கு லண்டனில் வாழும் இலங்கையர்களின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க லண்டனில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியபோது, "நமது நாட்டு மக்கள் ஆட்சியை அமைக்க, ஆட்சியை மாற்ற, தலைவர்களை மாற்றி ஆட்சியை கவிழ்க்க என அரசியல் பிரதிபலிப்புக்களை காட்டி வருகின்றனர். அரசியல் குறித்தும் அவர்கள் பேசுவதுண்டு. ஆனால், ஓரிரு வருடங்கள் கழித்து திரும்பிப் பார்க்கும்போது ஏமாற்றமும் வேதனையுமே மாத்திரமே எஞ்சியிருக்கும். எனவே, நீங்கள் எங்களை ஆதரித்தால், எங்களுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்தால், எங்களுக்காகப் பேசினால் உங்கள் கௌரவத்தை காத்திட நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

நாம் அனைவரும் கூட்டு முயற்சியுடன் பணிபுரிந்துள்ளோம். இங்கு வருகை தந்துள்ள நீங்கள் மாற்றத்தை நம்பியிருக்கின்றீர்கள். இந்த நாட்டில் வாழ்வதன் மூலம், நீங்கள் நமது இலங்கை நாடானது எப்படி இருக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டு அத்தகைய மாற்றத்தை எதிர்பார்க்கின்றீர்கள்.

மறுபுறம், தாயகத்தில் வசிக்கும் உங்கள் உறவினர்கள், சகோதரர்கள் மற்றும் நண்பர்கள் வாழ்க்கையில் அடைந்துள்ள அனுபவங்களின் அடிப்படையில் உங்கள் புரிதலை நீங்கள் விரிவுபடுத்தியிருக்கலாம். அதனடிப்படையில் உங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் நீங்கள் நினைக்கலாம்", என்று குறிப்பிட்டார். (ரேன-55)



# நெத்தலியாற்றில் இருந்து இளைஞரின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் உள்ள நெத்தலியாற்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, புளியம்பொக்கனை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சம்சுதீன் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுகின்றன என்று தெரிவித்த பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)







செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com





# கைப்பந்துப் போட்டிகளில் மகாஜனாக் கல்லூரியின் அணிகள் சம்பியனாகின!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ் வலிகாமம் வலய மட்ட கைப்பந்துப் போட்டிகளில் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை

மகாஜனாக் கல்லூரியின் இரு அணிகளும் சம்பியன்களாகின.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான இந்தக் கைப்பந்துப் போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 17 வயதுப் பெண்கள் அணியும் 20 வயதுப் பெண்கள் அணியும் சம்பியன்களாகியுள்ளன.

இப்போட்டிகள் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்றிருந்தன.

# சுயதொழில் முயற்சியாளர்களுக்கு புதிய தொழிநுட்ப உபகரணங்கள் வழங்கல்



(எம்.எம்.ஜெஸ்மின்)

உணவு மற்றும் போசணையை கட்டியெழுப்பும் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய தொழிநுட்ப உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பிரதமர் தினேஷ் குணர்வத்தன மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

குருநாகல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுய தொழில் முயற்சியாளர்களுக்கான இலத்திரனியல் நுட்பத்தில் கோழிக் குஞ்சு பொரிக்கும் இயந்திரங்கள் மற்றும் கோழிக்குஞ்சுகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட், ராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் சமன்பிரிய ஹேரத், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, யூகே சுமித் உடுகும்புர, மாகாண பிரதம செயலாளர் தீபிகா கே.குணரத்தின, மாவட்ட அரசாங்க அதிபர் ரத்நாயக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# அட்டாளைச்சேனையில் பாத யாத்திரீகர்களுக்கு இஸ்லாமிய உறவுகள் பழரசம் வழங்கி உபசரிப்பு





(வி.ரி. சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 37ஆவது நாளில் இன்று செவ்வாய்க்கிழமை அட்டாளைச்சேனையில் பயணித்தபோது, இஸ்லாமிய உறவுகள் அடியார்களுக்கு பழரசம் வழங்கி உபசரித்தனர்.

இன, மத நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியான இச்செயற்பாடு அனைவராலும் பாராட்டப்பட்டது.

யாத்திரைக் குழுவினர், இன்று காலை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு சென்று தரிசனம் செய்தனர். அங்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் கி.ஜெயசிறில் குடும்பத்தினர் அடியார்களுக்கு காலை ஆகாரம் வழங்கினர்.

மேலும் பல அடியார்களுக்கு பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று போன்ற இடங்களில் சென்றும் காலை ஆகாரம் வழங்கினர். யாத்திரைக்குழு ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜாவும் உடனிருந்தார்.

பின்னர் அடியார்கள் அக்கரைப்பற்று சென்று தங்கியிருந்தனர். நாளை அவர்கள் தம்பட்டை தம்பிலுவில் திருக்கோவில் சென்று விநாயகபுரத்தில் தங்குவார்கள்.

எதிர்வரும் 29ஆம் தேதி உகந்தை மலையை அடைந்து, 30ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள்.



# மக்களின் வாழ்வாதாரங்கள் அழிவுறும் நிலை கண்டுகொள்ளாத

# காவல்துறை, அரச தரப்பினர்!

## நெல்லிக்குளம் மலைப்பகுதி மக்கள் விசனம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரில் கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை பாறை உடைப்பு இயந்திரத்துடன் பாறை உடைப்பு வேலைகளை ஆரம்பிக்க முயன்றபோது அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், உடைப்பு இயந்திரம் அப்பகுதியில் இருந்து இன்னும் அகற்றப்படவில்லை. இவ்விடயம் சம்மந்தமாக சேனையூர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் காவல் துறையில் முறைப்பாடு செய்ததாகத்





தெரிவித்தார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அப்பகுதியில் மக்கள் கூடி நின்றனர். அவர்கள் இந்த விடயம் குறித்துத் தெரிவிக்கையில்,

“நாட்டின் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்காக எமது வாழ்வாதரத்தினை அழித்தொழிக்கும் நடவடிக்கையினை உடன் நிறுத்த வேண்டும். வாழ்வாதாரத்தினை பாதிக்கும் வகையில் மலைகளை உடைப்பதற்கு அனுமதி வழக்கியது யார்?” என்ற கேள்வியையும் எழுப்பினர்.

சேனையூர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாளாந்தம் கூலித் தொழிலையும் நெற்செய்கை, கால் நடை வளர்ப்புப் போன்ற வாழ்வாதார முயற்சிகளை நம்பி வாழ்ந்து வரும் மக்கள்தான் இப்பகுதியில் இருக்கின்றனர். குளம், வயல், காடு போன்ற வளங்களையே இவர்கள் நம்பி வாழ்கின்றனர். மலையைச் சூழவுள்ள வயல்கள், மேய்ச்சல் தரை இயற்கைக் காட்டு வளம் என்பன கல்லுடைப்பால் அழிவுறும் அபாயம் ஏற்படும் என்றார்.

இம்மலையில் இந்து வழிபாட்டு அடையாளங்களும் கானப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொல்பொருள் என்ற போர்வையில் தனியார் காணி அபகரிப்புப் போன்றன வடக்குக் கிழக்கில் மாத்திரம் ஏன் இடம் பெறுகின்றன? வெடி பொருட்களைக் கொண்டே மலையைத் தகர்த்து, அதில் உள்ள கற் பாறைகளை எடுக்க முயற்சிக்கின்றனர். சட்ட ரீதியான அனுமதி என்றாலும் அரச திணைக்களங்களின் ஒட்டு மொத்த அனுமதியுடனேயே இப்படியான செயற்பாடுகளை மேற் கொள்ள முடியும் என்பது கவனிக்கத்தக்கது.

இப்பகுதியில் மக்களின் வாழ்வாதாரமாக விவசாயச் செய்கையானது குளங்களை நம்பி மேற்கொள்ளப்படுகிறது. கால் நடைகள் வளர்ப்பு இடம் பெறுகின்றது. இவ்வாறான நிலையில் இந்த மலைகளை உடைப்பதனால் பல சூழலியல் தாக்கங்கள், பல பாதக விளைவுகளை அது ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புவிச்சரிதவியல் சுரங்கப்பணியகம், வனஜீவராசிகள் திணைக்களம், சுற்றாடல் அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம், பிரதேச செயலகம், காணித் திணைக்களம், விவசாய சம்மேளனம் உட்பட பல திணைக்களங்களின் அறிக்கைகள் சாதகமாகப் பெறப்பட்டதன் பின்புதான் இவ்வாறான வேலைகளுக்கு அனுமதிகளை



முறையாகப் பெறலாம். ஆனால், அரசியல் அதிகாரம் படைத்த கொந்தராத்துக்காரர்கள் மக்களின் கருத்துக்களை செவிசாய்க்காது இது போன்ற விடயங்களில் ஈடுபடுவது கவலையளிக்கிறது.

எது எவ்வாறாக இருந்த போதிலும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை 81 கீழ், சமாதானக் குலைவை ஏற்படுத்தக் கூடிய செயல் ஒன்றைச் செய்த அடிப்படையில் சம்பூர் பொலிசார் அப்பாவிப் பொதுமக்கள் 10 பேரை செவ்வாய்க்கிழமை (11) கைது செய்தனர். பின்னர் அவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

விடுவிக்கப்பட்ட 10 பேரும் மூதூர் நீதிமன்ற நீதிமன்றில் புதன்கிழமை (12) மதியம் ஆஜர் ஆகினர். நீதிமன்றமானது இவர்கள் அனைவரையும் சொந்தப் பிணையில் விடுவித்ததோடு குறித்த பிரதேசத்தை இம் மாதம் 15 ஆம் திகதியன்று நீதவான் பார்வையிடுவார் என்றும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

கைதான 10 பேர் சார்பாக சட்டத்தரணிகளான பு.முகுந்தன், ந.மோகன் ஆகியோர் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேவேளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் சண்முகம் குகதாசன் குறித்த பிரதேசத்துக்கு விஜயம் செய்து மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

“பல வருட காலமாக இங்கு குடியிருந்து வருகிறோம். இங்கு பயிர்ச் செய்கை மூலமே வாழ்வாதாரத்தை மேற்கொண்டு சீவிக்கிறோம். அதற்குள் இம்மலையை உடைத்தால் நாங்களும் அழிந்து விடுவோம். மலை உடைப்புத் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்ற போதும் முறைப்பாட்டை ஏற்காமல், உரிய இடத்துக்கு வந்து அவர்களை வேலைகளைத் தொடரவிட்டு எங்களைக் கைது செய்தார்கள்.

**இப்பகுதியில் மக்களின் வாழ்வாதாரமாக விவசாயச் செய்கையானது குளங்களை நம்பி மேற்கொள்ளப்படுகிறது. கால் நடைகள் வளர்ப்பு இடம் பெறுகின்றது. இவ்வாறான நிலையில் இந்த மலைகளை உடைப்பதனால் பல சூழலியல் தாக்கங்கள், பல பாதக விளைவுகளை அது ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது**

எனவே, வாழ்வாதாரத்தை அழித்து நாசமாக்கி மலையை உடைக்க வேண்டாம்” என அப் பகுதியைச் சேர்ந்த குடும்பத் தலைவி ஒருவர் தனது ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

மக்கள் உரிமைகளை செவிமடுக்காது பொலிஸாரும் அடாவடியில் ஈடுபட்டதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்து அப்பாவி மக்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதும் உரிமைகளை மீறும் செயலாகும். இவ்வாறாக சிறுபான்மை மக்கள் மீது அதிகாரத்தை வைத்து அவர்களை அடக்கி ஒடுக்க நினைப்பதும் அதிகாரத் துஷ்பிரயோகமாகவே கருதப்படுகிறது. அன்றாட ஜீவனோபாயத்தைக் கூட தங்களால் மேற்கொள்ள முடியாமல் இம் மக்கள் வருந்துகின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள், குழந்தைகளை வைத்துக்கொண்டு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்ந்து வரும் இந்த மக்களின் வாழ்வாதாரத்தை ஏன் அழிக்க நினைக்கிறார்கள்?

“மாரி காலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் இந்தக் குளத்தை நம்பியே விவசாயத்தில் ஈடுபடுகிறோம். 25க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கே வாழ்கிறோம்” என அப் பகுதி விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

மலை உடைப்புக்குப் பயன்படுத்தும் வெடிபொருட்கள் மூலமாகவும் ஒலி மாசடைவு உட்பட பல பாதக விளைவுகள் ஏற்படக்கூடும். இதனால், அப்பகுதி மக்களே பாதிக்கப்படுவார்கள். விவசாயச் செய்கை, கால் நடை வளர்ப்பு, சுத்தமான நீரைப் பெற முடியாது குளங்கள் பாதிப்பு எனப் பல பிரச்சினைகளை அம்மக்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்படும். “காய்ந்த விறகுகளைக்கூட எடுக்க முடியாது என்று வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எங்களைத் தடுத்து நிறுத்துவர். ஆனால், மலையை உடைக்க அவர்களுக்கு அனுமதி கொடுப்பார்கள். பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறோம். அரசாங்கம் தான் மக்களை பாதுகாக்க வேண்டும். இதற்காக அரசாங்கம் உதவ வேண்டும்!” என குடியிருப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

மக்களுக்கு ஒரு சட்டம் - மலையை உடைப்பவர் கு ஒரு சட்டமா? இப்படியான பாரபட்சமான செயற்பாடுகளால் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற வார்த்தைக்கே அர்த்தமற்றதாகிவிடுகிறது. (5ஆம் பக்கம் பார்க்க..)

# இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் மாதிரிச் சித்திரைப் புத்தாண்டு!





(நூருல் ஹுதா உமர்)

இனங்களுக்கு இடையில் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் இரண்டு மாணவர்களின் மாதிரிச் சித்திரைப் புத்தாண்டு விழா பாடசாலை அதிபர் ஏ.ஜி. எம்.நிசாத் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப பிரிவு தலைவரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் அதிபர் எஸ். கலையரசனும், விசேட அதிதியாக அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஜே.எல்.பாஸிலும், சிறப்பு அதிதியாக கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் சிறுவர் பெண்கள் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பெண் பொலிஸ் பரிசோதகர் திருமதி. ஏ.எம்.எச்.சீ.அபேரட்ணவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் மூலம் பௌத்த, இஸ்லாமிய, இந்து மற்றும் கிறிஸ்தவ மதத்தவர்களின் கலை, கலாசாரங்கள், உடை மற்றும் உணவுவகைகள் என பல வகையான விடயங்களை மாணவர்கள் அறியக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதோடு பிற மதங்களை மதிக்கும் மனப்பாங்கினையும் ஏற்படுத்துகின்றன.

அத்தோடு இவ்விழாவில் புத்தாண்டு விளையாட்டுக்களும், பல் மத உணவு வகைகளும் மாணவர்களால் பரிமாறப்பட்டதுடன் போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நீண்ட நாள் தேவை கருதி மேற்கத்தேய பாண்ட் வாத்திய கருவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலையின் பழைய மாணவர் குழந்தை நல வைத்தியர் சரவணபவானந்தா, கல்லூரி அதிபர் செல்லையா இளங்கோவிடம் இவற்றை அண்மையில் கையளித்திருந்தார்.

## திருகோணமலை செல்வநாயகபுரத்தில் அவசர சிகிச்சை நிலையம் திறப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று (17) திறந்து வைத்து மக்கள் பாவனைக்காகக் கையளித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரலவும் அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.








## மக்களின் வாழ்வாதாரங்கள் அழிவுறும் நிலை ......

“இந்த மலையில் 200 வருடங்கள் பழமை வாய்ந்த கோயில் ஒன்று உள்ளது. இங்குள்ள வணக்க ஸ்தலங்களையும் சேர்த்து உடைக்க முற்படுகிறார்கள். வாழ்வாதாரத்தை நோக்காகக் கொண்டு இந்த இயற்கையை நம்பி செயற்படும் எங்களை, வன்முறையைத் தூண்டியதாக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கைது செய்தார்கள்.”

“பல்வேறு இக்கட்டான சூழ் நிலையில் வாழும் மக்களை அச்சுறுத்தி செயற்படுவதும், வாழ்வாதாரத்தை அழிப்பதும் மக்கள் மீது திணிக்கும் துஷ்பிரயோகங்களாகவே உள்ளதன. அப்பாவி மக்களுக்கான வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுப்பதும் அவர்களுக்கு பொருளாதார ரீதியான முன்னேற்றங்களைக் கொண்டு சேர்ப்பதும் அரசாங்கம் மீதுள்ள கடமையாகும்.”

மூதூர் நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கின் பின்னர் ஊடகங்களுக்கு மக்கள் இவ்வாறு கருத்துத் தெரிவித்தனர் இந்த மலையை உடைப்பதால் பல்வேறு இன்னல்களை இங்குள்ள மக்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்படும்! “எங்களது வாழ்வாதாரம் இங்கு தான் உள்ளது. விவசாயச் செய்கை, கால் நடை வளர்ப்பு போன்றன இதன் மூலம் பாதிக்கப்படலாம். அரசாங்கம் மக்களுக்காகத் தான் இருக்கிறது. மக்கள் விடயத்தில் அது கவனம் செலுத்த வேண்டும்!” என்றும் வலியுறுத்தினர். மக்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற விடயங்களையும் சுமுகமான நிலைமைகளையும் உருவாக்க உரிய அரச உயரதிகாரிகள் முன்வர வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# பிலிப்பைன்ஸ் – சீனக் கப்பல்கள் மோதல்! தென் சீனக் கடல் பகுதியில் பரபரப்பு



சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் மீது, சீன கடலோரக் காவல் படைக் கப்பல் மோதியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாம் தோமஸ் மணல்திட்டுப் பகுதியை நோக்கி, கட்டுமானப் பொருட்களுடன் நேற்று (17) பயணித்த பிலிப்பைன்ஸ் கப்பலை, சீன கடலோரக் காவல் படைக் கப்பல் தடுத்து நிறுத்த முயற்சி செய்துள்ள நிலையில், இரு கப்பல்களும் மோதிக்கொண்டதாக சீன கடலோரக்காவல்படை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் பாதிப்புக்கள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், கப்பல்கள் மோதிக் கொண்டதை உறுதிப்படுத்தியுள்ள பிலிப்பைன்ஸ், வழக்கம்போல் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டுதான் தங்களது கப்பல் சென்றதாகக் கூறியுள்ளது.

தென் சீன கடலின் ஏறத்தாழ அனைத்து பகுதிகளுக்கும் சீனா உரிமை கொண்டாடிவருகிறது.

இருந்தாலும், அந்தக் கடல் பகுதியில் தங்களுக்கும் உரிமையுள்ளதாக பிலிப்பின்ஸ், மலேசியா, மற்றும் தாய்வான் ஆகிய கூறிவருகின்றன.

இதன் காரணமாக அந்த நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையே பதற்றம் நீடித்து வருகிறது.

இதற்கு முன்னரும், குறித்த கடல் பகுதியில் சீன – பிலிப்பைன்ஸ் கப்பல்கள் மோதிக் கொண்ட சம்பவங்கள் பல முறை நடந்தேறியுள்ளதாகவும், இதில் கப்பல்கள் சேதமடைந்ததுடன் சிலர் காயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

(04)

# மதுசாலையை எதிர்த்து கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மூதூர் இருதயபுர பிரதேசத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ள மதுபானசாலையின் அனுமதியை உடனடியாக இரத்துச்செய்யுமாறு வலியுறுத்தி இன்று ஊர்வலத்துடன் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு, மூதூர் பிரதேச செயலகம் வரை சர்வமதத் தலைவர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள் மற்றும் இருதயபுர பொதுமக்கள் பங்குபற்றுதலுடன் ஊர்வலமும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றன.

குறித்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மூதூர் பிரதேச செயலாளருக்கு பொதுமக்கள் சார்பாக மதுசாலையை மூடுவதற்கான கோரிக்கை மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.










# ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் சூப்பர் 8 சுற்று இன்று ஆரம்பம்!

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் முதல் சுற்று மேற்கிந்திய தீவுகள் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியுடன் இன்று நிறைவடைந்தது.

மேற்கிந்திய தீவுகளின் சென் லுசியாவில் நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 218 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. நிகோலஸ் பூரன் 98 ஓட்டங்களையும், ஜோன்சன் சார்லஸ் 43 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆப்கானிஸ்தான் அணியின் குல்படின் நைப் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

219 ஓட்டங்களை வெற்றி யிலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஆப்கானிஸ்தான் அணி, 16.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது. இப்ராஹிம் சர்தான் 38 ஓட்டங்களையும், ஓமார்சாய் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மேற்கிந்திய தீவுகள் அணியின் ஓபேத் மக்கோய் 3 விக்கெட்டுக்களையும், அக்கில் ஹோசைன், குடகேஷ் மோடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 104 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டியதுடன், போட்டியின் ஆட்ட நாயகனாக நிகோலஸ் பூரன் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சூப்பர் 8 சுற்றின் 2 குழுக்களினதும் போட்டி அட்டவணை வெளியிடப்படபட்டுள்ளது. முதலாவது குழுவிமில் இந்தியா, அவுஸ்ரேலியா, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாவது குழுவில் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய அணிகள் உள்ளன.

சூப்பர் 8 சுற்றின் முதலாவது போட்டி மேற்கிந்தியத் தீவுகளின் அன்டிகுவாவில் இன்று நடைபெறவுள்ளது. தென்னாபிரிக்க – அமெரிக்க அணிகள் விளையாடவுள்ள இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (04)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!